*2016 பிப்ரவரி 19*]

*துறைக்கென இணையதள வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதால், பெரும்பாலான மனுதாரர்கள் தாங்கள் வசிக்கும் வட்டம், நகராட்சி மற்றும் கிராமங்களிலேயே வேலைவாய்ப்பு தொடர்பான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்திருக்கிற காரணத்தால், கள்ளக்குறிச்சியில் தனியாக வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**79—**

**சத்துணவு மையம்**

***54121—திரு. வீ.பி. நாகைமாலி:**

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், கீழையூரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியின் சத்துணவு மையத்தினை பள்ளி வளாகத்திற்குள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், கீழையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடத்திற்கு ரூ.2,20,000/- செலவில் 20 சதுர மீட்டர் பரப்பளவில் வைப்பறையுடன்கூடிய சமையலறை பள்ளி வளாகத்தினுள்ளேயே கட்டி முடிக்கப்பட்டு, 5-2-2015 முதல் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2016 பிப்ரவரி 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், கீழையூரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடம் இதுவரை பள்ளி வளாகத்திற்கு வெளியே செயல்பட்டு வந்தது. இதைப் பள்ளி வளாகத்திற்குள்ளேயே அமைத்துத் தர வேண்டுமென்ற எனது வேண்டுகோளினை ஏற்று, பள்ளி வளாகத்திற்குள்ளேயே சத்துணவுக் கூடத்தை அமைத்துத் தந்த மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, எனது தொகுதியில் முடிந்தவரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சத்துணவுக் கூடங்கள் மற்றும் ஊட்டச் சத்து மையங்களைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கி கட்டித் தரப்பட்டுள்ளன. இருப்பினும், கீழ்வேளூர் ஒன்றியத்தில் திருக்கண்ணங்குடி ஊராட்சியிலுள்ள அகரம், கீழ்வேளூர் பேரூராட்சியிலுள்ள சந்தைத்தோப்பு, காந்தி நகர், அண்ணா நகர் மேட்டுத் தெரு ஆகிய இடங்களில் உள்ள ஊட்டச் சத்து மையங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்த ஊட்டச்சத்து மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தர மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதி, எந்தெந்த கிராமம் என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*2016 பிப்ரவரி 19*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

**திரு. வீ.பி. நாகைமாலி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட ஊட்டச்சத்து மையங்களுக்குப் புதிதாகக் கட்டடம் கட்டித் தர ஆவன செய்வதாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

**திருமதி த. இந்திராகாந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கென வாழாமல், தமிழக மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து, வாழும் மனித தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

*என்னுடைய துறையூர் தொகுதிக்குட்பட்ட துறையூர் நகரத்தில் 18-வது வார்டில் உள்ள விநாயகர் தெருவில் அமைந்துள்ள சத்துணவு அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டிக்கொள்ளலாம். அப்படி நீங்கள் கொடுத்திருக்கின்ற நிதியிலிருந்து ஏற்கெனவே வேறு பல கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதி என்று அதை எழுதித் தருவார்களேயானால் உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதியிலிருந்து கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*